## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(04.09.2024 முதல் 08.09.2024)

அறிக்கைஎண்: 45/2024 தேதி : 03.09.2024

### அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (04.09.2024 முதல் 08.09.2024).

| கடந்த வார வானிலை (30.08.2024 முதல் 02.09.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (04.09.2024 முதல் 08.09.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 30/08 | நாள்-2 31/08 | நாள்-3 01/09 | நாள்-4 02/09 | தேதி | நாள்-1 04/09 | நாள்-2 05/09 | நாள்-3 06/09 | நாள்-4 07/09 | நாள்-5 08/09 |
| 8.8 | 4.7 | 3.7 | 0.3 | மழை (மி.மீ.) | 1 | 1 | 0 | 0 | 3 |
| 35 | 36 | 37 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 39 | 39 | 38 | 39 | 38 |
| 26 | 27 | 28 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 29 | 28 | 28 | 28 | 28 |
| 7 | 7 | 6 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 5 | 5 | 7 |
| 76-50 | 70-75 | 62-57 | 63-41 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-40 | 60-40 | 60-40 | 60-40 | 70-40 |
| 18 | 23 | 19 | 24 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 16 | 14 | 16 | 16 | 18 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 04.09.2024, 05.09.2024 மற்றும் 08.09.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38 - 39 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 29 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14 - 18 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |

| | | |
|---|---|---|
| | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | நாற்றங்கால் | நெல் நாற்றங்காலில் ஒரு சென்ட்க்கு 2 கிலோ வீதம் டீ.ஏ.பி மேலுரமாக இடவேண்டும். நெல் நாற்றங்காலில் இலைப்பேனை தவிர்க்க விதைத்த 10 நாட்களுக்குள் அசார்டிராக்டின் 0.03 சதம் (3 மி.லி/லி) ஒட்டும் திரவமான காதி கோபுர பார் சோப் 3 கிராம் / லி என்ற அளவில் கலந்து நாற்றங்கால் நன்கு நனையும் படி கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் தெளித்தல் அவசியம். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயில் உலர்த்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்தில் இருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

.

**இயக்குநர்**